ஏக்கருக்கு ரூ.70,000 நட்டமில்லாத வருவாய்க்கு நாட்டுரக எலுமிச்சை..!



எலுமிச்சைப் பழங்களுடன் தேவராஜ்...



நிறம், மணம், சுவை, வீரியம்... என எதற்கும் குறைவில்லாதவை நாட்டு ரகக் காய்கறிகள் மற்றும் பழங்கள். அவற்றிலிருந்தே விதைகளையும் எடுத்துக் கொள்ளலாம் என்பதால், எல்லா வகைகளிலும் விவசாயிகளுக்குப் பலன் தருபவை நாட்டு ரகங்கள்தான். ஆனால், பசுமைப் புரட்சியின் விளைவாக அதிக விளைச்சல், குறைந்த வயது, எனப் பல காரணங்கள் காட்டப்பட்டு... மெல்ல மெல்ல ஊடுருவிய வீரிய ரகங்கள்தான் இன்று விவசாயத்தில் 80% இடத்தை ஆக்கிரமிக்கின்றன.

இத்தகைய சூழலிலும் பெரும்பாலான இயற்கை விவசாயிகள் மற்றும் பாரம்பரிய விவசாயிகள் ஆகியோரில் குறிப்பிட்ட சதவிகிதத்தினர் தொடர்ந்து நாட்டு ரகங்களைத் தான் சாகுபடி செய்து வருகிறார்கள். அவர்களில் ஒருவர்தான் ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் அருகேயுள்ள கள்ளிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த தேவராஜ். இவருடைய குடும்பத்தினர் 53 ஆண்டுகளாக நாட்டு ரக எலுமிச்சையை சாகுபடி செய்து வருகின்றனர்.

தற்பொழுது இயற்கை விவசாயியாக மாறியிருக்கிறார் தேவராஜ். அவரது தந்தை கிணற்றுப் பாசனத்தில் இரண்டு ஏக்கர் நிலம் இருந்துள்ளது. மாடுகளை வைத்து ஏற்றம் இறைத்து பாசனம் செய்துள்ளனர். கம்பு, ராகி, சோளம் தான் முக்கிய விவசாயம். 53 வருடங்களுக்கு முன்னர் எங்கிருந்தோ 10 எலுமிச்சை நாத்துக்கள் வாங்கி வந்து நடவு செய்திருக்கிறார் இவரது தந்தை. அதில் நன்கு காய்த்து குவியவும் சந்தையில் விற்று அந்த காலத்திலேயே நல்ல வருமானம் கண்டுள்ளார். இப்போது மொத்தம் 12 ஏக்கர். அதில் ஒன்றரை ஏக்கரில் எலுமிச்சை இருக்கிறது. எல்லாம் 13 வயது மரங்கள். இன்னும் 7 வருடம் வரை மகசூல் எடுக்கலாம். என்றவர், இயற்கை விவசாயத்துக்கு மாறிய கதையை விவரிக்கிறார்.

ஆரம்பத்தில் தொழுவுரம், ஆட்டு எரு என்று போட்டு விவசாயம் செய்த இவர் தந்தை பசுமைப் புரட்சியினால் எலுமிச்சை செடிகளுக்கு யூரியா, காம்ப்ளக்ஸ், பொட்டாஷ் என்று இரசாயன உரங்களைக் கொடுத்துள்ளார். இவரும் இதையே பின்பற்றியுள்ளார். மகசூல் நன்றாக இருந்தாலும் காய்களில் சொறிநோய்த் தாக்குதல் இருந்துள்ளது. அதனால் விளைச்சலில் 40 சதவிகித காய்கள் வீணாகியுள்ளது.

அப்போது பசுமை விகடன் மூலமாக 'புளியங்குடி' அந்தோணிசாமியின் அறிமுகம் கிடைத்து அவரைப் பார்த்து ஆலோசனை கேட்டு, இயற்கை விவசாயத்துக்கு மாறியிருக்கிறார்.

மூன்று வருடமாக முழு இயற்கை விவசாயம் செய்கிறார். இயற்கை விவசாயத்துக்கு மாறிய பின்னர் தோட்டத்தில் நிறைய மாற்றங்கள் தெரிவதாக கூறுகிறார். இப்பொழுது பிஞ்சு விழுவது நின்றுவிட்டதாகவும், சொறி நோய்த் தாக்குதலும் குறைந்திருப்பதாக கூறுகிறார். மகசூலும் அதிகரித்துள்ளது. தோட்டம் கொஞ்சம் கொஞ்சமாக பழைய நிலைக்கே திரும்பியிருக்கிறது என்றவர் சாகுபடி முறையை விவரித்தார். நிலத்தை தேர்வு செய்து சுத்தப்படுத்தி24 அடி இடைவெளியில் இரண்டு கன அடி அளவில் குழி எடுக்க வேண்டும். (எலுமிச்சை செடிகளுக்கு நல்ல வெயில் தேவை என்பதால், இவ்வளவு இடைவெளி தேவை). இப்படி ஏக்கருக்கு 75 குழிகள் எடுக்க வேண்டும். ஒவ்வொரு குழியிலும் 4 கிலோ தொழுவுரம், ஒரு கூடை மணல் ஆகியவற்றை நிரப்பி மேல் மண்ணை நிரவி, அதன் நடுவில் தொண்ணூறு நாள் வயதான நாட்டு ரக ஏலுமிச்சை நாற்றை நடவு செய்ய வேண்டும்.

நடவு செய்த அன்று தண்ணீர் பாய்ச்ச வேண்டும். 3-ம் நாள் மீண்டும் பாசனம் செய்ய வேண்டும். சொட்டு நீர்ப் பாசனம் அமைப்பது சிறந்தது. மண் காயாத அளவுக்கும் செடி வாடாத அளவுக்கும் தொடர்ந்து தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. ஆறு மாதங்களுக்கு ஒரு முறை ஒவ்வொரு கன்றுக்கும் 3 கிலோ தொழுவுரம், 3 கிலோ ஆட்டு எரு ஆகியவற்றை கலந்து இட வேண்டும். நன்கு வளர்ந்த பிறகு, 10 கிலோ ஆட்டு எரு, 10 கிலோ தொழுவுரத்தைத் தொடர்ந்து கொடுக்க வேண்டும். முடிந்தளவுக்கு மழைக் காலத்துக்கு முன்னர் கொடுத்துவிட வேண்டும்.

நடவு செய்த 5-ம் ஆண்டிலிருந்து மகசூல் கிடைக்கத் தொடங்கும். ஒவ்வொரு தடவையும் பூ எடுக்கத் தொடங்கும் சமயத்தில் 10 லிட்டர் தண்ணீரில் 200 மில்லி பஞ்சகாவ்யாவைக் கலந்து, கைத்தெளிப்பான் மூலமாக தெளிக்க வேண்டும். பிஞ்சு பிடிக்கும் சமயத்தில் 10 லிட்டர் தண்ணீரில் 500 மில்லி பஞ்சகாவ்யாவைக் கலந்து தெளிக்க வேண்டும்.

காய் இளம் மஞ்சள் நிறத்துக்கு மாறும் சமயத்தில் வேப்பெண்ணெய், மண்ணெண்ணெய் கரைசலைத் தெளிக்க வேண்டும். பழுத்து மஞ்சள் நிறத்துக்கு மாறும் சமயத்தில் அறுவடை செய்யலாம்.

எலுமிச்சையில் வருடத்துக்கு மூன்று முறை மகசூல் எடுக்கலாம். கார்த்திகை, மார்கழி, தை மாதங்களில் நல்ல மகசூல் கிடைக்கும். ஒரு செடியில் 500 பழங்களிலிருந்து 600 பழங்கள் வரை காய்க்கும். ஆனால் இந்த சமயத்தில் அதிக வரத்திருப்பதால் சந்தையில் விலை குறைவாக கிடைக்கும். குறைந்தபட்சம் ஒரு பழம் 50 பைசாவுக்கு விலை போகும். ஆனி, ஆடி, ஆவணி மாதங்களில் செடிக்கு 100 பழங்களுக்கும் மேல் காய்ககும். மகசூல் குறைவாக இருப்பதால் ஒரு பழத்துக்கு 5 ரூபாய்க்கு மேல் விலை கிடைக்கும். மாசி, பங்குனி, சித்திரை மாதங்களில் செடிக்கு சராசரியாக 20 பழங்களுக்கு மேல் கிடைக்கும். இந்த சமயத்தில் ஒரு பழம் 5 ரூபாய்க்கு மேல் விலை போகும். மூன்று மகசூலையும் சேர்த்து வருடத்துக்கு ஒரு செடியில் இருந்து சராசரியாக 700 பழங்கள் கிடைக்கும்.

தொடர்ந்து 20 வருடம் வரைக்கும் மகசூல் எடுக்கலாம். அதற்குப் பிறகு செடிகள் அழிக்கப்பட்டு புதுசா நடவு செய்ய வேண்டும். இவரிடம் ஒன்றரை ஏக்கரில் 120 செடிகள் இருக்கிறது. அதில் சராசரியாக பழம் ஒரு ரூபாய்க்கு விலை போகிறது. வீட்டுக்கே வந்து வியாபாரிகள் வாங்கி செல்கின்றனர். ஒன்றரை ஏக்கரிலிருந்து வருடத்துக்கு 70,000 ரூபாய் வருமானம் கிடைக்கிறது. வருடத்திற்கு 7,500 ரூபாய் பராமரிப்பு செலவாகிறது. 60,000 ரூபாய்க்கு குறையாமல் இலாபம் அடையலாம். என்கிறார் தேவராஜ்.

**தொடர்புக்கு**

தேவராஜ்

அலைபேசி எண்: 98658 34536.

**ஆதாரம்** : www.vikatan.com பசுமை விகடன் வெளியிடான தேதி, 10.8.11